2025 – நவம்பர் மாதம் –20 ஆம் தேதி வியாழக்கிழமை.
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 81/2024 c/w 80/2024*

*2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW 2 , வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 2 அருண் |
| தந்தையார் பெயர் | : | அரசிளங்கண்ணன் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | நிர்வாக அதிகாரி |
| வயது | : | 36 |

**தேதி: 20.11.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி ஆவேன். நான் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எ.ம.சா.2 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக:–**

1). 1–ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதற்கான காப்பீட்டு சான்றிதழின் உண்மை நகலைத் தாக்கல் செய்கின்றேன். அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1-ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். மனுதாரர் மேற்படி காப்பீட்டை பொருத்த வரையில் 3-ஆம் தரப்பினர் என்றால் சரிதான். மனுதாரருக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றால் சரிதான். காப்பீட்டை பொருத்த வரை மனுதாரர் 3-ஆம் தரப்பினர் என்பதால் எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:- இல்லை.</u>**

**ஒப்பம்/- கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**